# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்: 12 இதழ் : 10 அக்டோபர் 2026 தனிப்பிரதி - ரூ.20/- ஆண்டு சந்தா ரூ.200/-
Vol : 12 Issue No : 10 October 2026 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-

## தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்

மீகா 2:13



# "இயேசுவே" என்று கூப்பிடும் பொழுது மறுஉத்தரவு அருளும் தேவன். கேன்ஸர் இல்லை என்று வந்த அற்புதம்.

நான் இரண்டு மாதங்களாக மிகுந்த வயிற்று வலியினால் கஷ்டப்பட்டேன். மருத்துவமனைக்கு சென்ற போது குடல் பகுதியில் ஒரு கட்டி இருப்பதாக ஸ்கேன் செய்து பார்த்து கூறினார்கள். அந்த கட்டி 99.9% கேன்ஸர் ஆகத் தான் இருக்கும் என்று சொல்லி Biopsy எடுக்க கூறினார்கள். அப்பொழுது என் தாயார் என்னை அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு அழைத்து கொண்டு வந்தார்கள். **Dr.ஜேன் ஜாஷ்வா** அவர்களிடம் வந்து ஜெபம் செய்தேன். அவர்கள் ஒரு பொருத்தனை செய்துகொள்ளும்படியும், ஜெப எண்ணெய் போட்டு ஜெபம் செய்யும்படியும் ஆலோசனை கூறினார்கள். Biopsy எடுப்பதற்கு 2 நாட்கள் முன் மருத்துவரிடம் அனுமதி கேட்டு அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்து கலந்து கொண்டேன். ஜெபவேளையில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் என்னை முன்னே அழைத்து எனக்காக ஊக்கமாய் ஜெபித்தார்கள். ஜெபிக்கும் போது 3 முறை **இயேசுவே** என்று கூப்பிட்டு **"நீர் இந்த மகளை இன்றைக்குத் தொட்டு சுகப்படுத்துகிறதை இந்த மகள் தன்னுடைய சரீரத்தில் உணர வேண்டும் ஆண்டவரே"** என்று சொல்லி கண்ணீரோடு ஜெபித்தார்கள்.

அன்றைக்கு இரவு நான் சாப்பிட்டு முடித்தபின் தூங்கப் போகும் போது வயிறு பயங்கரமாக வலித்தது. ஏதோ ஒன்று இழுக்கிறது போல இறுக்கமாகவும், தொட்டால் கல் போலவும் இருப்பதை உணர்ந்தேன். நான் ஜெபித்துக் கொண்டு அமர்ந்திருந்தேன். என் பிள்ளைகளையும் என் கூட அமர்ந்து ஜெபிக்க சொன்னேன். அவர்களும் எனக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ***திடீரென்று என்னுடைய கட்டப்பட்ட வயிற்றில் ஒவ்வொரு நரம்புகளாக விடுவிக்கப்படுவது எனக்கு நன்றாக தெரிந்தது. 10 நிமிடம் ஏதோ நடந்து கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. என் பிள்ளைகளையும் அழைத்து வயிற்று பகுதியில் ஏதோ ஒன்று பண்ணுகிறது என்று சொன்னேன். கர்த்தர் எனக்கு முழுமையாய் அற்புதமான சுகத்தை தந்தார். பலூன் போல் வீங்கி இருக்கும் வயிறு அப்படியே வீக்கம் இல்லாமல் சாதாரணமாக மென்மையாய் மாறினது. இயேசு என்னை தொட்டதை அந்த நிமிடமே உணர்ந்தேன். பிள்ளைகளும் தொட்டுப் பார்த்து விட்டு அம்மா வயிறு கல் போல் இல்லை சாதாரணமாக இருக்கிறது என்றுச் சொன்னார்கள்.*** 2 நாட்கள் கழித்து Biopsy எடுத்தேன். 13 நாட்கள் கழித்து பரிசோதனை முடிவு வந்தது. கேன்ஸர் இல்லை என்று மருத்துவர் சொல்லியதை கேட்டு மகிழ்ச்சியடைந்து, ஜீவனுள்ள தேவனை ஸ்தோத்தரித்தேன்! இரண்டு மாதங்களாக இருந்த வயிற்று வலியும் முழுவதுமாக நீங்கியது. கர்த்தர் பரிபூரண சுகத்தைத் தந்தார். நான் செய்த பொருத்தனையை நிறைவேற்ற ஆலயத்தில் வந்து சாட்சி சொல்கிறேன்.



பரிபூரண சுகம் கொடுத்த தேவாதி தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம். தேவனுக்கே மகிமை.

– திருமதி. நான்சி, திருச்சி.

# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை



Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்கள் ஒவ்வொருவரையும் இந்த புதிய மாதத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாதத்தில் கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! தேவன் நம்மை எல்லா இக்கட்டுகளுக்கும் விலக்கி கண்மணி போல காத்து தம்முடைய பாதையில் அனுதினமும் நடத்தி வருவதற்காக அவரை துதிப்போம்.

*முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, யுத்தத்திற்குப் புறப்படு; பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, தேவன் உனக்கு முன்னே புறப்பட்டிருப்பார் என்றார். தேவன் தனக்குக் கற்பித்தபடியே தாவீது செய்தபோது, பெலிஸ்தரின் இராணுவத்தைக் கிபியோன் துவக்கிக் காசேர்மட்டும் முறிய அடித்தார்கள். அப்படியே தாவீதின் கீர்த்தி சகல தேசங்களிலும் பிரசித்தமாகி, அவனுக்குப் பயப்படுகிற பயத்தைக் கர்த்தர் சகல ஜாதிகளின்மேலும் வரப்பண்ணினார் - 1 நாளா 14:15,16,17*

இந்த வசனங்களில் கூறப்பட்டிருப்பது போல சத்துருக்களாலும், போராட்டங்களாலும் நாம் சூழப்பட்டிருந்தாலும் கர்த்தருடைய வார்த்தையை கேட்டு அதின்படி நாம் செய்யும் போது கர்த்தர் நமக்கு மகத்தான வெற்றியை கட்டளையிடுவார். அவர் கிருபை நம்மைவிட்டு ஒரு நாளும் விலகாது. தாவீது போன இடமெல்லாம் அவனை காப்பாற்றி காத்த தேவன் நிச்சயமாகவே நம்மையும் காத்து அவருடைய சித்தங்களை எல்லாம் நம் மூலமாக துரிதமாக விளங்கப்பண்ணுவார். கர்த்தர் உங்கள் முன்பாக இந்த மாதம் முழுவதும் செல்வாராக!

ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-

காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627

தெலுங்கு: +91 9944536343

மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

கடந்த மாதத்தில் நடந்த கூட்டங்களை தேவன் ஆசீர்வதித்ததற்காக தேவனை துதிப்போம். அக்டோபர் மாதம் 19,20 ஆகிய நாட்களில் நாகர்கோவிலில் நடைபெறும் அற்புத ஆராதனைப் பெருவிழா கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். அன்பரின் ஊழிய பங்காளர்களாகிய நீங்கள் உங்கள் இடங்களில் நடக்கும் கூட்டங்களில் கண்டிப்பாக கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெறுங்கள். எங்களது நிகழ்ச்சிகளை நேரலையாக சமூக வலைதளத்தில் அதிகமான நாள் செப்டம்பர் மாதத்தில் கொடுத்திருக்கிறோம். அதைப் பார்த்து ஆசீர்வதிக்கப்படுங்கள். MOJ YouTube Channel-களை Subscribe செய்துகொள்ளுங்கள். ஊழியத்தின் தேவைகள் அதிகமாக இருப்பதால் உற்சாகமாக தாங்கி ஜெபிக்குமாறு உங்களை தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.

SJ Saves Trust சார்பாக கிறிஸ்துமஸ் காலங்களில் நாம் அநேக ஏழை பிள்ளைகளுக்கு பரிசு பொருட்களை கொடுக்க வேண்டி உள்ளது. அதற்காக உங்களுடைய உதாரத்துவமான உதவிகளை செய்து ஏழை பிள்ளைகளை சந்தோஷப்படுத்துங்கள். கர்த்தர் தாமே உங்களை அபிஷேகித்து நிலைப்படுத்தி ஆசீர்வதித்து நடத்துவாராக.

உங்கள் அனைவரது ஜெபத்தாலும், கர்த்தருடைய அளவற்ற தயவினாலும் எங்கள் அப்பா Dr. Ananda Stira அவர்கள் இப்பொழுது உடல் நலம் தேறி நலமுடன் இருக்கிறார்கள். தொடர்ந்து அவரது பலவீனங்களில் கர்த்தருடைய பெலன் பூரணமாய் விளங்கும்படி ஜெபியுங்கள். எங்கள் குடும்பத்தினருடைய சுகம் மற்றும் பாதுகாப்பிற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**Dr. ஆனந்த ஸ்திரா ஐயா அவர்கள் எழுதிய பரலோகமே என் சொந்தமே**
**புத்தகத்தை வாங்கி விட்டீர்களா?**
**வாங்காவிடில் எங்களை தொடர்பு கொள்ள வேண்டிய எண் : 8098742638**

*ஒவ்வொரு மாதத்தின் 1ம் தேதியன்று மாலை புதிய மாதத்திற்கான ஆசீர்வாதக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம். தவறாது கலந்துகொண்டு பயன்பெறுங்கள்!*


கிறிஸ்துவின் பணியில்

**Dr. ஜேன் ஜாஷ்வா**

*jane@mojindia.org*


இம்மாத வாக்குத்தத்தம் | *ஆமோஸ் 9:12; அப் 16:31; யோபு 5:9; யாக்கோபு 5:16.*



# தடைகளை நீக்குகின்றவர்
# Obstacle Breaker



தேவ செய்தி

*Rev.Dr.A.* ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற வல்லமையான நல் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த புதிய மாதத்தில் பிரவேசிப்பதற்கு கிருபை செய்த தேவன் மீதமுள்ள மாதங்களிலும் உங்களை தம் கண்மணியைப்போல பாதுகாத்து வழி நடத்துவாராக!

*தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப்போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார் - மீகா 2:13.* இந்த வாக்குத்தத்தத்தின்படியே நம் ஆண்டவராகிய கர்த்தர் இந்த மாதத்திலே உங்களுக்கு முன்பாக உள்ள தடைகளை நீக்கி உங்களை ஆசீர்வதிப்பதற்கு அவர் வல்லமையுள்ளவராயிருக்கிறார். இந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் வேதத்திலிருந்து சில பகுதிகளை வாசித்து, எப்படி கர்த்தர் நம் முன்பாக உள்ள தடைகளை நீக்குகின்றார் என்பதை உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

*கர்த்தருடைய வார்த்தைகள் எல்லாம் புடமிடப்பட்டவைகள், தம்மை அண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்* (நீதி. 30:5) அது மட்டுமல்ல நிச்சயமாக உங்களுக்கு முன்பாக உள்ள தடைகளை அது நீக்கி உங்களை வழி நடத்துவதாகவும் இருக்கிறது. *மீகா 2:13*-ன் அடிப்படையில் சிந்திக்கவும் தியானிக்கவும் உங்களை அழைக்கிறேன்.

பிரியமானவர்களே! தடை என்பது இயல்பான ஒரு காரியம். எல்லோருடைய வாழ்க்கையிலும் தடைகள் வரும். விளையாட்டில் கூட ஏராளமான தடைகள் வைக்கப்பட்டிருக்கும் ஒரு போட்டியே உள்ளது. அந்த தடைகளை எல்லாம் தாண்டி செல்ல வேண்டும். அந்த விளையாட்டை தடகள போட்டி என்று சொல்வார்கள். இந்த தடைகளை எல்லாம் தாண்டி தாண்டி ஒருவன் வெற்றி பெறுவான் என்றால் அவனுடைய முயற்சி பாராட்டத்தக்கதாக இருக்கும். இதை போலத் தான் வாழ்க்கை என்கிற ஓட்டத்திலே பல தடைகளை சந்திக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். தடைகளை சில சமயத்தில் உடைக்க முடியும், சில சமயத்தில்

அதை உடைக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் மீகா தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் கொடுக்கின்ற ஒரு வார்த்தைதான் *"தடைகளை நீக்குகிறவர் நமக்கு முன்பாக நடந்து போகிறார்"* எவ்வளவு ஆறுதலான வார்த்தையாக உள்ளது.

அன்பு சகோதர, சகோதரிகளே! தடைகள் என்பது எல்லோருடைய வாழ்க்கையிலும் வரும். மாணவனுக்கு தேர்வு நேரங்களில் பயம் என்பது ஒரு தடையாக காணப்படும், ஒரு நேர்முகத் தேர்வு செல்கிறவனுக்கு அவன் செல்கிற பேருந்து தாமதமாகி தடை உண்டாக்கிவிட்டால் அவனது நிலைமை மிக மோசமாகிவிடுகிறது. ஏதோ ஒரு சூழ்நிலையில் டிராபிக் நெரிசல் உண்டாகி இரயில் நிலையம் செல்வதில் தடை உண்டாகி இரயில் சென்றுவிட்டது என்றால் அந்த பயணியின் நிலைமை கவலைக்குள்ளாகிறது. வியாதி என்னும் தடைகள், கடன் பிரச்சனைகள் என்னும் தடைகள் உங்களுக்கு முன்பாக உள்ளதா? கலங்காதீர்கள்! தடைகளை நீக்குகிற நம் தேவன் நமக்கு முன்பாக செல்வார் என்றால் எப்படிப்பட்ட தடைகளாக இருந்தாலும் அந்த தடைகளை அவர் நீக்குவார். வேதத்தில் தேவ ஜனங்கள் சந்தித்த தடைகளை ஆண்டவர் எப்படி நீக்கி அவர்களை அற்புதமாக வழி நடத்தினார் என்பதை குறித்து மூன்றுவிதமான சம்பவங்கள் மூலம் நாம் இந்த செய்தியில் பார்ப்போம்.

## 1. செங்கடல்

இஸ்ரவேல் ஜனங்களுடைய வாழ்க்கையிலே வராத தடைகளே இல்லை என்று கூறலாம். அவ்வளவு தடைகள் அவர்கள் மத்தியில் காணப்பட்டது. ஆனால் அவைகளை எல்லாம் அவர் அவர்களுக்கு முன்பாக சென்று நீக்கினார். யாத்திராகமம் 14ஆம் அதிகாரத்தில் ஒரு சம்பவம் எழுதப்பட்டுள்ளது. அதை உங்களுக்கு சற்று விளக்குகின்றேன்.

இஸ்ரவேல் புத்திரர் பலத்த கையுடன் எகிப்தை விட்டு புறப்பட்டு சென்றார்கள். அடிமைத்தனத்திலிருந்த அந்த மக்களை கர்த்தர் மோசேயை எழுப்பி அவன் மூலமாக அந்த ஜனங்களுக்கு ஒரு பெரிய விடுதலையை கொடுத்து வழி நடத்துகிறார். அந்த ஜனங்கள் கானானை நோக்கி பயணமாகிறார்கள். இவர்கள் தங்கள் பயணத்தில் மகிழ்ச்சியாக வந்து கொண்டிருக்கிறார்கள். அடிமைத்தனம் நொறுங்கிவிட்டது, நமக்கொரு சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று எல்லோரும் வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வரும் பொழுது அவர்களுக்கு முன்பாக செங்கடல் குறுக்கிடுகிறது. செங்கடல் மட்டும் இருந்தாலும் பரவாயில்லை, பின்னால் இவர்களை வழியனுப்பின பார்வோனுடைய சேனைகள், ராணுவம் வருகிறது. இந்த சூழ்நிலையை சற்று நிதானித்து பாருங்கள். *முன்னால் செங்கடல், இது ஒரு பெரிய தடை, இதற்கு மேல் பயணம் செய்ய முடியாத ஒரு தடை. பின்னால் பார்வோனுடைய சேனை இரண்டு பக்கத்திலும் தடை ஏற்படுகிறது, எங்கே செல்வது.* பிரியமானவர்களே! அநேக சமயங்களில் நம்முடைய வாழ்க்கையிலும் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டு, அதனால் தடைகள் வருகிறது. நீங்கள் முன்னேற முடியாதபடி தடைகள் எதிராக வரலாம். ஆனாலும் சோர்ந்து போகாதீர்கள்! இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக செங்கடல் இருப்பது மோசேக்கு நன்கு தெரிந்திருக்கும். 40 நாளில் செல்கின்ற பயணத்தை 40 வருடமாக்கி விட்டார். இந்த

செங்கடலை கடந்து தான் கானானுக்கு செல்ல வேண்டும் என்பதும், அந்த கடலையும் இரண்டாக கர்த்தர் பிளப்பார் என்பதும் மோசேக்கு நன்றாக தெரியும்.

அன்பானவர்களே! ஒரு தடையை தாண்டி வந்து விட்டோம் என்று நீங்கள் நினைக்கும் பொழுது வாழ்க்கையில் பின்னால் பல தடைகள் உங்களை துரத்தி கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள். ஆனாலும், தடைகளை நீக்குகிறவர் உங்களுக்கு முன்பாக செல்லும் பொழுது அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அது தானாகவே கவிழ்க்கப்பட்டு விடும். *கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்!* இது தான் கர்த்தர் உங்களுக்கு முன்பாக போகிறார் என்பதன் பொருளாகும். பார்வோன் பின் தொடர்ந்து வந்தது இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏற்பட்ட பிரச்சனை அல்ல, அது கர்த்தருடைய பிரச்சனை. நீங்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக இருப்பீர்களானால் அவர் உங்களுக்கு வருகிற தடைகள் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்.

*அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள் - யாத். 14: 13*

மேற்கூறப்பட்ட வார்ததையைதான் மோசே இஸ்ரவேல் ஜனங்களை பார்த்து நம்பிக்கையுடன் கூறுகிறான். கர்த்தர் செய்யப் போகிற இரட்சிப்பை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். 400 வருடத்திற்கு மேல் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் விடுதலையாகி வந்த பிறகும் இன்னும் அவர்களை பார்வோன் துரத்திக் கொண்டு வருகிறான். அன்பானவர்களே! அதைத் தான் யாத். 14:13 வசனம் தெளிவாக சொல்கிறது. பெலிஸ்தியர்கள், கானானியர்கள், அம்மோனியர்கள் மற்றும் ஏனானியர்கள் கூட யுத்தத்திற்கு வந்தார்கள். ஆனால் கர்த்தர் சொன்ன வார்த்தையின்படி அதற்கு பிறகு எகிப்தியர் யுத்தத்திற்கு வந்ததாக சரித்திர குறிப்பில் இல்லை. இது தான் கர்த்தர் நமக்குக் கொடுக்கின்ற ஒரு தைரியம். அவர் மோசேக்கு கொடுக்கின்ற உத்திரவாதம்.

*நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள் - யாத். 14:16*

செங்கடலுக்கு முன்பாக நிற்கின்ற மோசேயை பார்த்து கர்த்தர் *"உன் கையில் உள்ள கோலை சமுத்திரத்திற்கு நேராக நீட்டு"* என்கிறார். அதே போல நீட்டினான், கடல் வெட்டாந்தரையாக மாறியது. அதில் இஸ்ரவேல் ஜனங்கள் நடந்து சென்றார்கள். ஆனால் பின் தொடர்ந்த பார்வோனின் இரதங்கள், ராணுவங்களை எல்லாம் தண்ணீர் மூடிப்போட்டது.

பிரியமானவர்களே! தடைகளை நீக்கிப் போடுகிறவர் உங்களுக்கு முன்பாக சென்றால், பின்னால் எத்தனை தடைகள் வந்தாலும் அதை ஆண்டவர் நீக்கிப் போடுவார். நீங்கள் பின்னால் உள்ள தடைகளை பார்த்துக் கொண்டே சென்றீர்கள் என்றால் சோர்ந்து போவீர்கள்.

இதை வாசிக்கும் வாசகர்களே! மோசேயின் கரங்களில் கோல் இருந்தது, அவன் அதை சமுத்திரத்திற்கு நேராக நீட்டினான். ஆனால் உங்கள் கரங்களில் கோல் இல்லாவிட்டாலும் உங்கள் கரங்களை வானத்திற்கு நேராக நீட்டி ஜெபம் பண்ணுங்கள். கரங்களை நீட்டி ஜெபிக்கும் ஜெபத்திற்கு ஒரு வல்லமை உண்டு. தடைகளை நீக்குகின்ற தேவன் உங்கள் முன்பாக போகிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எத்தனை எதிரிகள் பெருகி இருந்தாலும் பரவாயில்லை, கலங்காதீர்கள்! அவர் உங்களுக்கு ஏற்படுகின்ற தடைகளை தகர்த்தெறிந்து பாதுகாப்பார்.

## 2. எரிகோ கோட்டை

*எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது; ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை.*

செங்கடலை இஸ்ரவேல் ஜனங்கள் கடந்து விட்டார்கள். அடுத்ததாக கானானுக்கு பயணம் செய்து கொண்டிருக்கிற பொழுது மோசேயினுடைய காலம் முடிந்துவிட்டது. அதற்கு பிறகு யோசுவா பயணத்தை தலைமை ஏற்று தொடருகிறான். இப்பொழுது இவர்களுக்கு அடுத்த பிரச்சனை ஏற்படுகிறது. எரிகோ அடைக்கப் பட்டிருந்தது, ஒருவரும் அதிலிருந்து வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை. அதை கடந்து செல்லாமல் கானானுக்குள் போக முடியாது. இது ஒரு பெரிய சவாலாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு இருந்தது.

*கர்த்தர் யோசுவாவை நோக்கி: இதோ, எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்தவீரரையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன் - யோசுவா 6:2*

*“எரிகோவையும், அதின் ராஜாவையும், யுத்த வீரரையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன்”* என்று யோசுவாவிடம் கர்த்தர் கூறுகிறார். செங்கடலை கடப்பதற்கு முன்பு கர்த்தர் *“யுத்தம்”* என்னுடையது என்றார். ஆனால் இங்கே *“உன்னிடமே அவர்களை ஒப்புக்கொடுத்துவிட்டேன்”* என்றும், ஆனால் அதற்கு முன்பு சில காரியங்களை செய்ய வேண்டும் என்றும் கூறுகிறார். எரிகோ கோட்டை மீது குதிரைகள் ஓடும், அதில் வீடு கட்டி குடியிருந்தார்கள். ராகாப் போன்றவர்கள் அதில் தான் வாழ்ந்தார்கள். அப்படி என்றால் அந்த கோட்டை எவ்வளவு பெரியதாக இருந்திருக்கும் என்பதை புரிந்து கொள்ளுங்கள். இந்த கோட்டையை உடைப்பது சாதாரண காரியமல்ல. ஆனால் ஆண்டவர் இதற்கு ஒருசில சாதாரண வரைமுறைகளை யோசுவா மூலம் அந்த ஜனங்களுக்கு கூறினார். 6 நாட்கள் அந்த கோட்டையை அமைதியாக சுற்றி வாருங்கள், முதலாவது ஆசாரியர்கள் செல்ல வேண்டும். அதற்கு பிறகு மற்றவர்கள் செல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒரு முறை சுற்றி வாருங்கள், ஆறு நாட்கள் இப்படி செய்யுங்கள். ஏழாம் நாள் ஏழு முறை சுற்ற வேண்டும். ஏழாவது முறை கோட்டையை சுற்றி நடந்து செல்கையில், ஏழு எக்காளங்களை பிடித்திருக்கிற ஏழு ஆசாரியர்களும் முன்னால் நடந்து போக வேண்டும். நான் சொல்லும் மட்டும் நீங்கள் ஆர்ப்பரியாமலும், உங்கள் வாயினால் சத்தம் போடாமலும் இருங்கள். உங்கள் வாயிலிருந்து ஒரு பேச்சும் புறப்பட வேண்டாம் என யோசுவா சொல்லியிருந்தான்.

*நான் சொல்லும் நாள்மட்டும், நீங்கள் ஆர்ப்பரியாமலும் உங்கள் வாயினால் சத்தங்காட்டாமலும் இருங்கள்; உங்கள் வாயிலிருந்து ஒரு பேச்சும் புறப்படவேண்டாம்; ஆர்ப்பரியுங்கள் என்று உங்களுக்கு நான் சொல்லும் நாளிலே ஆர்ப்பரிப்பீர்களாக என்று கட்டளையிட்டிருந்தான் - யோசுவா 6:10*

யோசுவா ஜனங்களை ஆர்ப்பரியுங்கள் என்று சொல்லி எக்காளம் ஊதியவுடன் ஜனங்கள் ஆர்ப்பரித்து முழங்குகையில் அலங்கம் இடிந்து விழுந்தது.

*எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழங்குகையில், அலங்கம் இடிந்துவிழுந்தது; உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராகப் பட்டணத்தில் ஏறி, பட்டணத்தைப் பிடித்து - யோசுவா 6: 20*

அன்பானவர்களே! *அமைதியாக இருக்க வேண்டிய நேரத்தில் நாம் அமைதியாக இருக்க வேண்டும். ஆர்ப்பரிக்கும் பொழுது நாம் சத்தமிட்டு ஆர்ப்பரிக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் சுற்றி வந்தது வெளிப்பக்கம். ஆனால் அலங்கம் வெளிப்புறத்திலிருந்து உட்புறமாக விழவில்லை. உட்புறத்திலிருந்து வெளிப்புறமாக விழுந்து கிடந்தது.* இது வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படி நடந்தது தேவனுடைய திட்டம். இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தர் எவ்வளவு வைராக்கியமான, வல்லமையான காரியங்களை செய்திருக்கிறார். இந்த தேவன் நிச்சயம் உங்கள் வாழ்க்கையில் எரிகோ போன்ற தடைகளை உடைத் தெறிவார். உங்கள் வேலைகளுக்கு விரோதமாக தடைகள் வரலாம், வீடு கட்டும் பணிகளுக்கு எதிராக தடைகள் வரலாம், திருமணத் தடைகளாக இருக்கலாம், வியாபார தடைகளாக இருக்கலாம். கலங்காதீர்கள்! *"நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்"* என்று உங்களை பார்த்து ஆண்டவர் கூறுகிறார். துதிக்க வேண்டிய நேரத்தில் துதியுங்கள்! ஆர்ப்பரிக்க வேண்டிய நேரத்தில் ஆர்ப்பரியுங்கள். தடைகளை நீக்கிப் போடுகின்ற தேவன் உங்களுக்கு முன்பாக போகின்றார்.

## 3. யோர்தான்

*யோர்தான் அறுப்புக்காலம் முழுவதும் கரைபுரண்டுபோம். பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே, மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக்கடுத்த ஆதாம் ஊர் வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது; உப்புக்கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று; அப்பொழுது ஜனங்கள் எரிகோவுக்கு எதிரே கடந்துபோனார்கள். சகல ஜனங்களும் யோர்தானைக் கடந்து தீருமளவும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீரில்லாத தரையில் காலூன்றி நிற்கும்போது, இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய் கடந்துபோனார்கள் - யோசுவா 3: 15-17*

பிரியமானவர்களே! இது ஒரு வித்தியாசமான அணுகுமுறையை நமக்கு உணர்த்துகிறது. ஆண்டவர் ஆசாரியர்களை உடன்படிக்கை பெட்டியை தூக்கிக்கொண்டு முன்பாக போக சொல்கின்றார். *உடன்படிக்கை பெட்டி தேவ பிரசன்னத்தை உணர்த்துவதற்கு ஒரு அடையாளம்.* ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே யோர்தான் குவியலாக குவிகிறது. ஆம்! சகோதர, சகோதரிகளே! இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள

வேண்டியது. சில சமயங்களில் தடைகளை நீங்கள் சந்திக்க வேண்டிய சூழ்நிலை நிச்சயம் வரும். அவற்றை எதிர்கொள்ள வேண்டிய நிலை வரும் என்பதையும் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. அப்படி நீங்கள் அந்த தடைகளை சந்திக்கும் பொழுது அங்கே யோர்தான் குவியலாக குவிந்தது போல அந்த தடைகள் நீங்கிப் போகும். *“என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிறதையும் செய்வான், அதைவிட மேலானதையும் செய்வான்”* என்று வாக்குக் கொடுத்த தேவன் அந்த தடைகளை உடைப்பார். அவருடைய பிள்ளைகளாகிய உங்களுக்கும் அந்த தடைகளை மேற்கொள்ளக் கூடிய வல்லமையை அவர் கொடுக்கின்றார். நீங்கள் கர்த்தருடைய பெலத்தினால் மட்டுமல்ல, அவருடைய அபிஷேகத்திலும் நிரம்பி காணப்பட வேண்டும். அதனால் தான் முதலாவது ஆசாரியர்களை போக சொல்கிறார். ஏனெனில் *ஆசாரியர்கள் தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்.* அப்படி ஒரு அபிஷேகிக்கப்பட்டவர்களாக இருந்தபடியினாலே முதலாவது அவர்கள் காலை யோர்தானில் வைக்க சொல்கிறார். ஆசாரியர்களுடைய உள்ளங்கால்கள் பட்ட மாத்திரத்தில் யோர்தானின் தண்ணீர் குவியலாக குவிகிறதை காண்கிறோம்.

*யோசுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான் - யோசுவா 3:5*

அடுத்ததாக மிக முக்கியமாக யோசுவா இஸ்ரவேல் ஜனங்களிடம் இன்றைக்கு உங்களை பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள் நாளைக்கு உங்கள் நடுவிலே அற்புதங்கள் நடக்கும் எனக் கூறினார். ஆம்! நம் வாழ்க்கையில் தடைகளே வரக் கூடாது என்று நாம் சொல்ல முடியாது. சில சமயங்களில் அந்த தடைகளை கொடுத்து, அந்த தடைகளை நாம் மிதித்து அதை மேற்கொள்ளக் கூடிய வலிமையையும் அதிகாரத்தையும் ஆண்டவர் நம் கரங்களில் கொடுப்பார்.

யோர்தானுடைய சம்பவத்தில் அப்படித் தான் நடந்துள்ளது. தடைகளை உடைக்கின்ற காரியத்தில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமாக காணப்படுகிறது. அது தான் தேவனுடைய வல்லமையான செயல்பாடுகள்.

என் அன்பு சகோதர சகோதரிகளே! இஸ்ரவேல் ஜனங்கள் வாழ்க்கையில் கடந்து வந்த மூன்றுவிதமான சம்பவங்களை நாம் இச்செய்தியின் மூலம் தியானித்தோம். உங்கள் வாழ்க்கையில் கூட செங்கடல், எரிகோ மற்றும் யோர்தான் போன்ற தடைகள் பற்பல சூழ்நிலைகளில் மற்றும் ரூபங்களில் வரலாம். ஆனால், அவைகளைப் பார்த்து சோர்ந்து போகாதீர்கள்! உங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, கர்த்தரை மட்டுமே சார்ந்து முன்னோக்கி செல்லுங்கள். பரிசுத்தமான வாழ்க்கையை அவர் எதிர்பார்க்கிறார். நீங்கள் இன்றைக்கு உங்களை பரிசுத்தம் பண்ணும்போது நாளைக்கு அற்புதத்தை காண்பீர்கள். தேவன் தாமே இந்த மாதத்தில் உங்களுக்கு முன்னே சென்று சகல தடைகளையும் உடைத்து வெற்றி தருவாராக. கர்த்தருடைய கிருபையும் சமாதானமும் உங்களுடனே கூட இருப்பதாக!

❖❖❖❖❖

# ஜுதி அறிக்கை

## உடைந்த கால் சுகமானது! மகள் வெளிநாட்டுக்கு போக தடை மாறினது!! காணாமல் போன மகன் திரும்பவும் வந்து சேர்ந்தான்!!!



நான் முள் அரைக்கிற வாகனம் இயக்கி கொண்டிருக்கும் பொழுது கால் தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். அதனால் கால் உடைந்து மிகவும் கஷ்டப்பட்டேன். இரண்டு மருத்துவர்களிடம் சென்று காலுக்கு கட்டு போட்டும் கால் சரியாகவில்லை. இந்நிலையில் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் சனிக்கிழமை நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத கூடுகையில் கலந்துக் கொண்டேன். ஜெப வேளையில் Dr. **ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபம்** செய்த அந்த நிமிடமே கால் வலி மறைந்தது. கர்த்தர் அற்புத சுகத்தைத் தந்தார். பரிபூரண சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரங்களை செலுத்துகிறேன்.

என்னுடைய மகள் சவுதிக்கு போக வேண்டுமென்று வெகு நாட்களாக பிராயசப்பட்டுக் கொண்டிருந்தாள். எவ்வளவு பிராயசப்பட்டும் ஒரு பயனும் இல்லாமல் போனது. திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் வந்து Dr. **ஆனந்த ஸ்திரா** ஐயாவிடம் மகளுக்காக ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். ஐயாவும் என் மகளுக்காக ஊக்கமாய் ஜெபித்தவிட்டு தீர்க்கதரிசனமாக, **“சீக்கிரம் உங்கள் மகள் வெளிநாட்டுக்குப் போவாள். எல்லா தடைகளும் நீங்கும்”** என கூறினார்கள். அவர்கள் சொன்னது போலவே என் மகளுக்கு வெளிநாட்டுக்குச் செல்ல விசா, டிக்கெட் எல்லாம் கிடைத்தது. மகள் உடனே வெளிநாட்டுக்குச் செல்ல கர்த்தர் கிருபைச் செய்தார்.

என் மகன் காணாமல் போய் ஒரு வருடமாய் கிடைக்கவில்லை. எங்கே இருக்கிறான்? உயிருடன் இருக்கிறானா? இல்லையா? என்ற கேள்விகளுக்கு பதில் தெரியாமல் கண்ணீரில் நாட்களை கழித்தோம். பல இடங்களில் நாங்கள் தேடியும் மகனைப் பற்றி எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை. அப்போழுது 2018-ம் வருடம் மார்ச் மாதம் Dr. ஆனந்த ஸ்திரா ஐயாவிடம் வந்து மகன் காணாமல் போனதைப் பற்றி சொல்லி ஜெபிக்க கூறினேன். அதற்கு Dr. ஆனந்த ஸ்திரா ஐயா **“கவலைப்படாமல் நீங்கள் செல்லுங்கள். உங்கள் மகன் வீட்டிற்கு திரும்ப வருவான். அடுத்த மாதம் இந்த ஜெப ஸ்தலத்தில் வந்து சாட்சி சொல்லுவீர்கள்”** என்று தீர்க்கதரிசனமாக கூறினார்கள். அவர்கள் சொன்னது போல காணாமல் போன மகன் ஜெபித்து வந்த **15-வது** நாளில் வீட்டிற்கு பத்திரமாக வந்து சேர்ந்தான். அடுத்த மாதம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் கடைசி சனிக்கிழமையில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத கூடுகையில் என் மகனோடு கூட வந்து சாட்சி கூறினேன்.

திரு. அந்தோணிச் சாமி, சிவகங்கை

## அற்புதமாய் தேவையைச் சந்தித்தார்! வேலையும் கிடைத்தது!!



எனக்கு 2006-ம் வருடத்திலிருந்து வேலை இல்லாமல் இருந்தது. 2026-ம் வருடம் ஜூன் மாதம் 14-ம் தேதி தஞ்சாவூரில் நடைபெற்ற அற்புதத்தின் மாலை கூட்டத்தில் கலந்துக் கொண்டு என்னுடைய ஜெப விண்ணப்பத்தை எழுதி கொடுத்தேன். அந்த மாதமே கடைசி சனிக்கிழமை திருச்சியில் குடும்ப ஆசீர்வாத கூட்டத்திற்கும் வந்து ஜெப விண்ணப்பத்தில் வேலை கிடைக்க வேண்டும் என்று எழுதி கொடுத்தேன். நான் எழுதி கொடுத்த ஜெப விண்ணப்பத்திற்கான பதில் கடிதம் 06.07.26 அன்று என் கையில் கிடைத்தது. *Dr.* **ஆனந்த ஸ்திரா ஐயா** அவர்கள் எழுதியிருந்ததான அந்த பதில் கடிதத்தில் **“ஏற்றதான வேலை உங்களுக்கு கிடைக்கும்”;** என்று எழுதியிருந்தார்கள். அது போல் கர்த்தர் எனக்கு வேலையைத் தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!!. அது மாத்திரமல்ல என்னிடம் டாட்டாய்ஸ் (Tataace) வண்டி ஒன்று இருக்கிறது. அந்த வண்டிக்கு FC கட்ட கூட பணம் இல்லாத நிலைமையோடு காணப்பட்டு கொண்டிருந்தேன். ஆனால், கர்த்தர் FC கட்டுவதற்கு ரூ.15000/-, இன்சூரன்ஸ் கட்டுவதற்கு ரூ. 18000/- இந்த தேவையை சந்தித்தார். எனக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

திரு. மரிய பிரான்சிஸ், தஞ்சாவூர்

## ஆபத்தான நிலையிலிருந்து பேரனுக்கு அற்புத சுகம் தந்த தேவன்!

என் மகன் குடும்பம் அமெரிக்காவில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். பேரன் ஈதன் மேத்யுவுக்கு 7 வயதாகின்றது. அவனுடைய மூளைப் பகுதியில் கட்டி ஒன்று இருப்பதை 2026 ஜனவரி மாதம் கண்டு பிடித்து அறுவை சிகிச்சை செய்து நீக்கினார்கள். மறுபடியும் ஜூலை மாதம் பரிசோதனை செய்து பார்த்து விட்டு மூளையில் கட்டி சிறியதாக இருக்கிறது என்று கூறி ஜூலை மாதம் 22-ம் தேதி மீண்டும் அறுவை சிகிச்சை செய்தனர். அந்த கட்டியை Test-க்கு அனுப்பினார்கள். அப்பொழுது நான் *Dr.* **ஆனந்த ஸ்திரா ஐயாவுக்கு** கண்ணீரோடே கடிதம் எழுதி அனுப்பினேன். அதற்கு வந்த பதில் கடிதத்தில் **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன். மீகா 7:15.** என்று *Dr.* **ஆனந்த ஸ்திரா ஐயா** எழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்கள் எழுதி அனுப்பியிருந்த வார்த்தையின்படியே Test-ன் ரிசல்ட் அது கட்டி அல்ல என Doctor's Report-ம் கிடைக்கச் செய்தார். எங்கள் பேரன் ஈதன் மேத்யு ஆகஸ்ட் 19-ம் தேதி முதல் சுகமாக பள்ளிக்கு செல்கிறான். சுகத்தைத் தந்து அற்புதம் செய்த கர்த்தருக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். ஜெபித்து கடிதம் அனுப்பிய ஐயாவுக்கும் நன்றியை கூறுகிறோம்.

திருமதி. விஜி ரென்ஜித், நாகர்கோவில்

# அன்பரின் பாதத்தில் தைரியத்தையும் ஆதரவையும் பெற்றேன்!!!



நான் எங்கே சென்றாலும் எனக்கு தைரியமும் இல்லை யாருடைய ஆதரவும் கிடைக்கவில்லை. அதனால் நான் பேசாமல் இருப்பேன். எனக்கு ஒன்றும் தெரியாது. *Dr.* **ஆனந்த ஸ்திரா அவர்களுடைய கூட்டத்திற்கு வந்து ஜெபித்தபின் எனக்கு தைரியத்தை தேவன் தந்தார்.** ஜோனத்தன் தம்பி அவர்களுடைய பிறப்பின் போது கர்த்தர் அவர்களுக்கு செய்த அற்புத சாட்சியை கேட்டபொழுது ஆச்சரியமாக இருந்தது. தம்பி தெலுங்கு மொழியில் **சோர்ந்து போகாதே மனமே** என்ற பாடலை பாடுவதைக் கேட்கும் போது சந்தோஷமாய் இருந்தேன். அவர்கள் பாடிய விதம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. வேறெதிலும் எனக்கு எந்த மகிழ்ச்சியும் கிடைக்கவில்லை. ஜோனத்தன் தம்பியை தொலைக்காட்சியில் தான் பார்த்து இருக்கிறேன். அவர்களை நேரில் பார்த்ததில் மிகுந்த சந்தோஷம். நான் வெளியில் எங்கும் செல்லமாட்டேன். அவர் தெலுங்கில் பாடிய பாடலைக் கேட்டுக் கொண்டேயிருப்பேன். அல்லேலுயா!!

திருமதி. புஸ்பலதா, ஐதராபாத்.

# தீர்க்க தரிசனத்தின்படி குடும்பத்தில் சமாதானம்!



கடந்த வருடம் ஐதராபாத்தில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் நான் பங்குப் பெற்றேன். அப்பொழுது நான் Rev.Dr.A.ஜாஷ்வா அவர்களுக்கு முன்பாக நடந்து போகும் போது, அவர்கள் என்னை அழைத்து **"கர்த்தர் உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்திற்காகவும் யுத்தம் செய்வார். உங்களுக்கு இருக்கிறதான எல்லாப் பிரச்சனைகளினின்றும் விடுவித்து உங்களுக்கு சமாதானத்தைத் தருவார்"** என்று தீர்க்கதரிசனமாக கூறினார்கள். பாஸ்டர் தீர்க்கதரிசனம் சொல்வதற்கு முன் எங்கள் குடும்பம் இரண்டாக பிரிகிற நிலைமையில் இருந்தது. பிசாசின் தாக்குதல் குடும்பத்தில் பயங்கரமாக இருந்தது. அடுத்த நாளில் இருந்து ஒவ்வொன்றாக விலக ஆரம்பித்தது. எங்கள் குடும்பத்தில் சமாதானம் வந்தது. தேவனுக்கே மகிமை!!!

திரு. ரமேஷ், நாகோல்

***Tamil WhatsApp No***
***+91 95004 87059***

***English WhatsApp No***
***+91 94889 32937***

# நற்செய்தி மற்றும் இயேசுவை பற்றிய சுவிசேஷ கூட்டங்களில் திரளான மக்கள் ஜாதி, இன, மத வேறுபாடின்றி கலந்துகொள்கின்றனர்!

*உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள்.*

*அப்போஸ்தலர் 4:29-33 (அப். 14: 3)*

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்க நெருங்க உலகமானது ஆவிக்குரிய பிரகாரமாக பயங்கரமான இருளுக்குள் செல்வதை நாம் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்து உலகத்தில் இருந்த பொழுது **"இருளில் இருக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தை கண்டார்கள்"** என்று வேதம் சொல்கிறது. (மத். 4:15,16; ஏசாயா 9:2,3)



ஆவிக்குரிய இருள் என்று சொல்லும் பொழுது அதில் மெய் தேவனாகிய உன்னதமான கர்த்தருக்கு விரோதமாய் நடைபெறுகிற அத்தனை காரியங்களும் பாவங்களும், சாபங்களும், சண்டைகளும், யுத்தங்களும், பிரிவினைவாதங்களும், பொறாமைகளும், பொருளாசை, பண ஆசை, பெருமைகளும், பெற்றோருக்கு அடங்காததும், அநீதியான கொலைகளும், கொள்ளைகளும் உள்ளடங்கியதாய் இருக்கும். நாம் வாழும் உலகில் விசேஷமாய் நம் தேசத்திலும் இவைகள் பெருகிக் கொண்டு வருகிறது. இதனால் சமாதானம் மனுமக்களை விட்டு எடுக்கப்பட்டுவிட்டது. இருளுக்கு அதிகாரியான சாத்தான் பரலோகத்திலிருந்து வரும் ஒளியை ஜனங்களுக்குள் பிரகாசிக்காதபடி தடை செய்கிறான். ஆனால் **"இருளான உலகிற்கு ஒளியாக வந்த இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமாகிய ஒளியே ஒரு மனிதனை நீதிமானாய் மாற்றுகின்றது. அது ஒருபோதும் அழியாது, அதை அழிக்கவும் முடியாது"** (யோவான் 1:5)

அநேகர் வாழ்க்கையில் முன்னேற வேண்டும், அதிகமாய் படிக்க வேண்டும், செல்வத்தை ஈட்ட வேண்டும், பேரும் புகழுமாக வாழ வேண்டும், பெரிய அதிகாரியாக மாற வேண்டும் என்று ஆசைப்பட்டு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அப்படி வாழ்க்கையில் முன்னேறின பிற்பாடோ உண்மையான சத்தியத்தையும், நித்திய ஜீவனையும், உன்னதமான

இறைவனிடத்தில் சேரும் வழியையும் பற்றி அக்கறையற்றவர்களாய் போய்விடுகிறார்கள். தங்களுடைய நம்பிக்கையின்படி, வேண்டுதலின்படி எல்லாம் கிடைத்துவிட்டது என்று மனநிம்மதி அடைகின்றனர். ஆனால் மரணத்திற்கு பிற்பாடு மகா பரிசுத்தமுள்ள நீதிபரராகிய தேவனிடத்தில் அவர்கள் சேர வேண்டும் என்பதை மறந்துவிடுகிறார்கள். இந்த உலகின் வாழ்வை குறித்தே மேன்மை பாராட்டுகிறார்கள். (லூக்கா 6:39)

அன்புள்ள தேவன் ஜாதி, மத, இன வேறுபாடின்றி, ஏற்றதாழ்வின்றி அனைவரையும் ஆசீர்வதிக்கிறார். ஏழைகளை நேசிக்கிறார். ஆனால் அதே சமயம் தாம் உண்டாக்கின மனுக்குலம் தன்னை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறார். இதற்காகவே தம்முடைய ஒரேபேறான குமாரனை உலகிற்கு அனுப்பினார். இயேசு கிறிஸ்துவாகிய அவர் நம்முடைய பாவங்கள் மன்னிப்படைய தம்மையே சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுக்கிறார். அந்த சிலுவையின் இரத்தம் இன்றும் பேசுகிறது. மகா வல்லமை உள்ளதாக இருக்கிறது. அவர் மரித்து அப்படியே இருந்துவிடவில்லை, உயிரோடு எழுந்தார். 500க்கும் மேற்பட்டோருக்கு காட்சியளித்தார். பின்பு தம்மை அனுப்பிய பிதாவினிடம் பரமேறினார்.

இப்பொழுதும் தம்முடைய ஊழியக்காரர்கள் தம்மை பற்றி சொல்லும் பொழுது நற்செய்தி கூட்டங்களில் அவர்களையும் அதே வல்லமையால் நடத்தி கூட்டங்களுக்கு வருகிற அனைத்து ஜனங்களுக்கும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், விடுதலையையும், பாவ மன்னிப்பையும் மற்றும் மாறுபட்ட நல்லதொரு வாழ்க்கையையும் கொடுக்கிறார். எத்தனை பெரிய ஆனந்தம் பாருங்கள். உலகில் எவ்விதமான நம்பிக்கையின் புத்தகங்களும் சொல்லாத காரியங்களை இயேசு கூறினார். அது என்னவென்றால், **“சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்”** என்றும் **“உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு ஆகாரங்கொடு”** என்றும் கூறுகிறார். (மத்தேயு 5:9,44,45)

இவ்விதமாய் கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறபடியால் அவரை பற்றி சாதுரிய ஞானமில்லாமல் நம் அன்பு நண்பர்களுக்கு, ஜெபம் தேவைப்படுபவர்களுக்கு, கண்ணீரில் வாழும் மக்களுக்கு சுவிசேஷத்தை சொல்கிறோம். அந்த கூட்டங்களில் இயேசுவை பற்றி பேசும் போதே திரளான ஜனங்கள் பயனடைகிறார்கள்.

நீங்களும் குடும்பமாக அல்லது உங்கள் சபையோடு சேர்ந்து இப்படிப்பட்ட நற்செய்தி கூட்டங்களை ஒழுங்கு செய்யுங்கள். அப்படி நீங்கள் செய்யும்பொழுது பரலோக ராஜ்ஜியத்திற்கு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவீர்கள்.

அதுபோல மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். லூக்கா 15: 10

**சில வருடங்களுக்கு முன்பாக கர்நூல் பகுதியில் கூட்டங்களுக்காக சென்றோம். சுமார்**

பத்தாயிரம் பேர் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அவர்கள் அனைவரும் எதிர்பார்த்தது உண்மையான தேவனுடைய ஆசீர்வாதம். அப்பொழுது மேடைக்கு கை, கால்கள் செயலிழந்த ஒரு சிறுவனை கொண்டு வந்தார்கள். அந்த சிறுவனை இயேசுவின் நாமத்தில் தொட்டு ஜெபித்த உடனே அவன் மடங்கிய கை, கால்கள் நேரானது. அவன் நின்று, பார்த்து, சந்தோஷமாய் நடந்து ஓட ஆரம்பித்தான். இரண்டாவதாக, பிசாசின் பிடியிலிருந்தும், சாபக் கட்டுகளிலிருந்தும் மக்கள் விடுதலை பெற்றார்கள். கேன்சர் கட்டிகள் மறைந்தது.

கூட்டம் முடிந்த பிறகு அந்த கூட்டங்களை ஏற்பாடு பண்ணின சகோ.பால்ராஜ் மற்றும் சரவணன் அவர்கள் கிறிஸ்துவை அறியாத சிறு கிராமத்திற்கு என்னை அழைத்து சென்றார்கள். அந்த கிராமத்தில் அதிகபட்சம் 150 வீடுகள் தான் இருக்கும். ஆனால் அந்த வீடுகளில் ஒரு பயங்கரமான சாபம் காணப்பட்டது. அந்த வீடுகளில் இரவில் படுக்கைக்கு செல்ல வேண்டுமென்றால் இரத்தமும், மனிதனுடைய கழிவு நீரும் கலந்து வாசற்படியிலே பூச வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் உண்மையாக தூங்க முடியும். வீடுகள் அனைத்தும் தீய ஆவியால் பாதிக்கப்பட்டிருந்தது. என்னுடன் வந்தவர்கள் மிகவும் பயந்தார்கள். எனினும் அந்த கிராமத்தின் விடுதலைக்காக ஜெபித்தேன். அந்த ஏழை மக்களை பல வருடமாக வதைத்த கெட்ட ஆவிகளை இயேசுவின் நாமத்தில் சபித்தேன். உடனே அத்தனை மக்களும் வீட்டைவிட்டு வெளியே வந்தார்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிசாசு ஓடும் பொழுது அவர்கள் கீழே விழுந்து முற்றிலும் விடுதலை ஆனார்கள். அந்த கிராமத்தின் சாபம் ஒழிந்தது. ஏழ்மை வறட்சி நீங்கியது. அந்த கிராமம் ஆசீர்வதிக்கப்பட்டது.



ஒரு சமயம் அரசு மருத்துவமனையில் இருந்து HIVயினால் பாதிக்கப்பட்டு மரணத் தருவாயில் இருந்த எட்டு வயது சிறுவனை மாட்டு வண்டியில் கொண்டு வந்தார்கள். சிறுவனின் உயிர் போய் கொண்டிருந்தது. நான் பாசத்துடன், அன்பாக பார்த்து கன்னத்தில் கை வைத்து “அன்பு மகனே! உன்னை இயேசு தொடுகிறார்” என்று சொன்ன உடனே “அவனுக்குள் ஜீவன் வந்தது” சுயநினைவற்று இருந்த சிறுவன் பேச ஆரம்பித்தான், எழும்பி உட்கார்ந்தான், நார்மலாக மாறினான். மீண்டும் மருத்துவமனை சென்று பரிசோதித்த பொழுது அந்த கொடிய HIV அவனுக்கு இல்லை. அவன் இன்றைக்கு தன் ஊரில் இயேசு செய்த அற்புதத்தை எல்லோருக்கும் சொல்லி

கஷ்டப்படுகிறவர்களுக்காக ஜெபிக்கிற ஊழியம் செய்து வருகிறான்.

இன்னும் நான் சொல்லிக் கொண்டே போகலாம். ஒவ்வொரு நற்செய்தி கூட்டத்திலும் கர்த்தர் திரளான அற்புதங்களை செய்கிறார். மனுமக்களை விடுவிக்கின்றார்! அநேக குடிகாரர்கள், புகை பிடிப்பவர்கள் மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமையானவர்கள் பரிபூரணமாய் விடுதலை அடைகிறார்கள். வீட்டில் சாபங்கள் போய் சமாதானம் வருகிறது. இதை வாசிக்கிற அன்பர்களே! நீங்கள் உங்களுடைய இடங்களில் உங்கள் சபை மூலமாக நற்செய்தி கூட்டங்களை ஏற்பாடு செய்யுங்கள். நாங்கள் நிச்சயமாய் வருவோம். கர்த்தருடைய அன்பின் ராஜ்ஜியம் எங்கும் பரவட்டும்.

சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு.

இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது - ஏசாயா 40:9,10 (சங்கீதம் 40:10; 119: 46)

உங்களால் கூட்டங்களை ஒழுங்கு செய்ய முடியாவிட்டால் இக்கூட்டங்களுக்காக ஜெபியுங்கள் அல்லது தேவைகளுக்காக உதவி செய்யுங்கள். கர்த்தருடைய ராஜ்ஜியத்தை நாம் கட்டுவோம். அப்பொழுது அவர் நம்மை கட்டுவார். நம் வாழ்க்கையை ஆசீர்வாதமாய் மாற்றுவார். எத்தனை உபத்திரவம் வந்தாலும் மரணத்தின் கோரங்கள் நம்மை எதிர்த்து நின்றாலும் இயேசுவின் நற்செய்தி சுவிசேஷத்தை யாரும் மறைக்கவும் முடியாது அதை அடக்கவும் முடியாது. ஏனென்றால் இந்த சுவிசேஷம் மனிதனால் அல்ல பரலோகத்திலுள்ள பிதாவினால் உண்டானது. அவரை எதிர்க்க பூமியிலும், பாதாளத்திலும், நரகத்திலும் ஒருவராலும் முடியாது. ஏனென்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே உலகத்தையே மோசம் போக்கின மரணத்திற்கு அதிகாரியாகிய சாத்தானை தமது மரணத்தினால் ஜெயிப்பார். ஆகவே எதற்கும் பயப்பட வேண்டாம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## நற்செய்திக் கூட்டங்களுக்கு உதவ

**MINISTRY OF JESUS**
**A/C NO. 10848474869 | IFSC : SBIN0000930**
**STATE BANK OF INDIA, CANTONMENT,**
**TRICHY MAIN BRANCH**
**Gpay : 95004 87061**

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)

Online Donation (Website)

Bank Account / QR Code

UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

இந்த QR code–ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்



| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930

State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புகொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புகொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்

10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# அக்டோபர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

01 தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர் நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன். (யோபு 42:2)

02 இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார். (சங் 2:9)

03 உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன். (எரே 30:11)

04 நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய். (ஏசா 41:15)

05 அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார். (யாத் 13:21)

06 நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். (ஏசா 45:2)

07 நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார். (ஏசா 42:3)

08 என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும். (யாத் 33:14)

09 அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும், உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும்; அபிஷேகத்தின்(னால்) நுகம் முறிந்துபோம். (ஏசா 10:27)

10 சிறைப்பட்டுப்போனவன் தீவிரமாய் விடுதலையாவான்; அவன் கிடங்கிலே சாவதுமில்லை, அவனுடைய அப்பம் குறைவுபடுவதுமில்லை. (ஏசா 51:14)

11 அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம்பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன். (ஏசா 46:11)

12 இடுக்கமென்கிற சமுத்திரத்தைக் கடக்கையில் அவர் சமுத்திரத்தின் அலைகளை அடிப்பார். (சக 10:11)

13 வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார். (ஏசா 59:19)

14 உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவேன் . (ஏசா 49:25)

15 வேடருடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம். (சங் 124:7)

16 இம்மட்டும் வா, மிஞ்சி வராதே;
(யோபு 38:11)

17 என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.
(சங் 18:29)

18 கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும் உம்முடைய பாதைகளை
எனக்குப் போதித்தருளும். (சங் 25:4)

19 நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்.
(சங் 32:8)

20 அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.
(சங் 33:9)

21 பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே
ஆகும். (சக 4:6)

22 உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை
மகிமையில் ஏற்றுக்கொள்வீர். (சங் 73:24)

23 நெடுங்காலமாகப் பாழாய்க்கிடக்கிற ஸ்தலங்களில் உம்முடைய பாதங்களை
எழுந்தருளப்பண்ணும். (சங் 74:3)

24 அவர் கன்மலையைத் தண்ணீர்த் தடாகமாகவும், கற்பாறையை நீரூற்றுகளாகவும்
மாற்றுகிறார். (சங் 114:8)

25 கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார் நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.
(யாத் 14:14)

26 நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்.
(மீகா 7:8)

27 மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்.
(ஏசா 26:7)

28 குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத
பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக
இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன். (ஏசா 42:16)

29 இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் இப்பொழுதே அது தோன்றும்.
(ஏசா 43:19)

30 வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து,
அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற
புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன். (ஏசா 45:3)

31 இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, உன் கட்டுகளை
அறுப்பேன். (நாகூம் 1:13)

# உலக செய்திகள்



நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி மாயமானவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சுமார் 5,000-க்கும் மேற்பட்டவர்கள் மாயமாகி உள்ள நிலையில், அதில 589 பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இமயமலை பிராந்தியத்தில் நேபாள-திபெத் எல்லைக்கு அருகே கடந்த ஆகஸ்ட் 26ந் தேதி பனிப்பாறை உடைந்து போடேகோஷி நதியில் பயங்கர வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்த வெள்ளப்பெருக்கால் மத்திய மற்றும் வடக்கு நேபாளத்தில் கடுமையான சேதங்கள் ஏற்பட்டன. பெருவெள்ளத்துடன் வந்த சேறும், சகதியும் உள்கட்டமைப்புகளை முற்றிலும் சீரழித்தன.

நேபாளம் மட்டுமன்றி ஒட்டுமொத்த உலகையும் அதிர்ச்சியில் ஆழ்த்திய இந்த பேரிடரில் ஆயிரக்கணக்கான மக்கள் அடித்துச் செல்லப்பட்டனர். திரிசூலி 3ஏ என்ற நீர்மின் திட்ட சுரங்கப் பாதைக்குள் தடிமனான சேறு மற்றும் இடிபாடுகளுக்கு இடையே பல தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நேபாள ராணுவத்தினர் மற்றும் மீட்புக் குழுவினர் மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இதுவரை சுமார் 13,676 பேர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதே சமயம், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன 5,130 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் சுமார் 589 பேர் இந்தியா உள்பட பல்வேறு வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், இடிபாடுகளில் இருந்து உயிரற்ற உடல்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன. நேபாளத்தை உலுக்கிய இந்த வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1400-ஐ நெருங்கியுள்ளது. இதுவரை 102 உடல்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், அடையாளம் காணப்படாத ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடல்கள், பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட உறவினர்களிடம் இருந்து டி.என்.ஏ. மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, உரிய பரிசோதனைகளுக்கு பின்னர் உடல்கள் அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படும் என போலீஸார் தெரிவித்துள்ளனர்.

# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)

**பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும். ஏசாயா 58:10**

நமது SJ Saves Trust – ல் பல ஆண்டுகளாக கைவிடப்பட்ட மற்றும் சமூதாயத்தினால் மறக்கப்பட்ட குழந்தைகளை நம்மால் இயன்ற அளவு தாங்கி பராமரித்து வருகிறோம். சேலம் மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக டியூசன் சென்டர்கள் வைத்து நடத்திக் கொண்டு வருகிறோம். இந்த டியூசன் சென்டர்கள் வெறும் பாடங்களை மட்டும் சொல்லி கொடுக்கும் இடமாக மட்டுமல்லாது பிள்ளைகளுக்கு ஒரு பாதுகாப்பின் இருப்பிடமாகவும் காணப்படுகிறது. ஏனென்றால்,

1. 90% பெற்றோர்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகவும் அல்லது வெளியூரில் தங்கி வேலைச் செய்கிறவர்களாகவும் இருக்கின்றார்கள். அதனால் அவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கவனிப்பதில்லை.

2. பரம்பரையாகவே கூலித்தொழில் செய்வதினால் தங்கள் பிள்ளைகளை படிக்க வைத்து உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர் மிகவும் குறைவு. அப்படி அவர்கள் நினைத்தாலும் அதற்கேற்ற வாய்ப்புகள் அமைவதில்லை.

இந்த சூழ்நிலையில் வளர்கின்ற பிள்ளைகளின் ஏழ்மை நிலைமையைப் பார்த்து தகுதியானவர்களுக்கு நாம் உதவி செய்து வருகிறோம். அந்த பிள்ளைகள் பள்ளி முடிந்து வீட்டிற்கு வரும்போது தங்கள் குடும்ப சூழ்நிலைகளின் நிமித்தம் மன உளைச்சலுக்கு உள்ளாகிறார்கள். **ஆனால் அந்த பிள்ளைகள் நமது டியூசன் சென்டருக்கு வரும் போது அது அவர்களுக்கு பாதுகாப்பாகவும் தன்னம்பிக்கை அளிக்கும் இடமாகவும் இருக்கிறது.** நமது டியூசன் சென்டர்களில் படிப்பு விளையாட்டுகள் மற்றும் பல ஆலோசனைகள் பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. இப்பிள்ளைகள் சமூதாயத்திலே ஒவ்வொரு நாளும் இணைந்து வாழ்கின்றபடியால் பலவிதமான சோதனைகளுக்கும், கெட்ட பழக்கவழக்கங்களுக்கும் அடிமையாகிவிடுகிறார்கள். எனவே அப்பிள்ளைகளுக்கு தினந்தோறும் நல்வழிப்படுத்தும் ஆலோசனைகள் அத்தியவசியமாகத் தேவைப்படுகிறது.

ஆகஸ்ட் மாதம் நாங்கள் அவர்களை சந்தித்த போது அவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினோம். **மதிய உணவாக சிக்கன் பிரியாணி, இனிப்பு, கார வகைகளும் கொடுக்கப்பட்டது.**

அந்த பிள்ளைகளிடம் தனிப்பட்ட முறையில் தற்போதைய சூழ்நிலையில் உங்களுக்கு உண்மையில் என்ன தேவை என்று கேட்டபொழுது, அவர்கள் சொன்ன பதில் எங்களை மிகவும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. 6-ஆம் வகுப்பிற்கு மேல் படிக்கும் பிள்ளைகளில் சிலர் எங்களுக்கு பாட வழிகாட்டி (study guide) வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களுடைய ஏழ்மை பெரிதாக இருந்தாலும் நன்றாக படிக்க வேண்டுமென்பதே ஏக்கமாக இருந்தது. எனவே அந்த பிள்ளைகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு பாட வழிகாட்டி (study guide) வழங்கியிருக்கிறோம். வருங்காலங்களிலும் அவர்களுடைய உயர்கல்வி படிப்புகளை தாங்கும் வகையில் நாம் செயல்படுவோம். இந்த பணிக்கு மாதந்தோறும் உற்சாகமாய் உதவி செய்கிற பங்காளர்கள் அனைவரையும் நன்றியோடு நினைத்துப்பார்க்கிறோம். கர்த்தர் தாமே உங்களை அளவில்லாமல் ஆசீர்வதித்து காப்பாராக!





## ஏழை எளியவர்களுக்கு, சிறு பிள்ளைகளுக்கு உதவி செய்ய

***Bank A/C Name : S.J. Saves Trust***
***Account No : 019150310875369***
***Bank : Tamil Nadu Mercantile Bank, Palakarai, Trichy.***
***IFS Code : TMBL0000019***
***A/C Type: Current***

## *SJ* மாணவியின் சாதனை

சேலம் மாவட்டம் செல்லப்பம்பாளையத்தில் நமது S.J Saves Trust இலவச டியூசன் சென்டரில் படித்த மாணவி ஸ்ரீநிதி இந்த ஆண்டு நடைபெற்ற நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றார். எம்.பி.பி.எஸ் படிப்பதற்கு இடம் கிடைத்துள்ளது.



# Christmas பரிசுப்பை
## அன்பின் பகிர்வு

கிறிஸ்துமஸ் காலங்களில் நம்முடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடு அன்பை பகிர்ந்து பரிசுகளை வழங்குவது வழக்கம். அப்படி நாம் செய்யும் வேளையில் ஏழைகளையும் நினைவுகூர வேண்டும். ***உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உபாகமம் 15:11–*** இந்த வசனத்தில் கூறப்பட்ட வாக்கின்படி நாமும் ஏழை எளியவர்களுக்கு கொடுத்து உதவி செய்வோம். இப்படி செய்வதன் மூலம் கிறிஸ்துவின் பிறப்பின் சந்தோஷத்தை நாம் பகிர்ந்தளிக்கிறோம். SJ Saves Trust– ன் சார்பில் நம் டியூஷன் சென்டரில் படிக்கும் ஏழை எளிய மாணவ மாணவியர்கள் மற்றும் அந்த சுற்று கிராமங்களில் உள்ள பிள்ளைகள், முதியவர்கள், ஏழைகளுக்கு இந்த கிறிஸ்துமஸ்–ஐ மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வகையில் புதிதாக இந்த வருட கிறிஸ்துமஸ் பரிசுப்பை வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம்.



**ஒரு பரிசுப்பையின்**
**மதிப்பு ரூ. 1500/– ஒரு ஏழை**
**சிறுவன், சிறுமி, முதியோரின்**
**எல்லையில்லா மகிழ்ச்சி**

குறிப்பு : சுமார் 500 பேருக்கு பரிசுப்பைக் கொடுத்து அவர்களை மகிழ்ச்சியாக்குவோம்.



### பிள்ளைகளின் பரிசுப்பைக்குள்

**புதிய உடை, இனிப்பு / கேக்**
சிறிய பிள்ளைகளுக்கு
**விளையாட்டுப் பொருள்**
பெரிய பிள்ளைகளுக்கு
**கைக்கடிகாரம்**



### முதியவர்களின் பரிசுப்பைக்குள்

**புதிய உடை**
**இனிப்பு / கார வகைகள்**
**அத்தியாவசியப் பொருள்**

**எத்தனை பரிசுப்பைகளைக் கொடுக்கப் போகிறீர்கள்?**
**இன்றே முடிவு செய்யுங்கள்... தாங்குங்கள்...**

உங்கள் குடும்பத்தில் மட்டும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் பகிராமல் ஏழை பிள்ளைகளையும் தாங்கி அவர்கள் முகத்திலும் கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியை மலரச் செய்வோம்.

# பொருத்துக - Bible Quiz

| கேள்விகள் | பதில்கள் |
|---|---|
| 1.    |  |
| 2.     |  |
| 3.       |  |
| 4.    |  |
| 5.      |  |
| 6.     |  |

# பொருத்துக - Bible Quiz

## கேள்விகள் | பதில்கள்

07.







08.





09








10.







## எடுத்துகாட்டு








எ (எலி) ஸ் (ஸ்திரி) த (தட்டு) ர் (ர்) — செங்கோல்

இருப்பக்கங்களிலும் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கேள்வி பக்கத்தில் உள்ள படங்களுடைய பெயர்களின் முதல் எழுத்துக்களை ஒன்று சேர்க்கும் பொழுது அது ஒரு பெயரைக் குறிக்கும். அந்த நபரின் சம்பந்தப்பட்ட பொருள் பதில் பக்கத்தில் உள்ளது. அந்த பதில் படத்தில் கொடுக்கப்பட்டுள்ள பொருளை சரியான கேள்வியுடன் சேர்த்து பொருத்தம் செய்க. உங்கள் பதில்களை கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு போட்டோ எடுத்து அத்துனுடன் உங்கள் பெயர், பங்காளர் எண் மற்றும் சரியான விலாசம் சேர்த்து அனுப்பி வைக்க வேண்டும்.

WhatsApp No: 9597555066 சரியான பதிலை அனுப்புகிறவர்களுக்கு பரிசு வழங்கப்படும்.
பதில்களை அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 20.10.2026



திருச்சியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
நாள்
அக்டோபர் 31
(சனிக்கிழமை)
நேரம்
காலை 9-30 மணி முதல்
மதியம் 2-00 மணி வரை
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு (80 அடி ரோடு),
தில்லைநகர், திருச்சி.




புதிய மாதத்தின் ஆசீர்வாதக்கூட்டம்
New Month Blessing Meeting
நாள்
நவம்பர் 1
ஞாயிற்றுக்கிழமை
அக்டோபர் 1
வியாழக்கிழமை
நேரம்
மாலை 6:00 மணி முதல்
இரவு 8:30 மணி வரை
இடம்
டெலிவரன்ஸ் சர்ச்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
தில்லைநகர், திருச்சி-18
தேவ செய்தி
Rev.Dr.A. ஜாஷ்வா Dr. ஜென் ஜாஷ்வா
Bro.ஜோனத்தன் மோசஸ் ராஜ் ஸ்திரா
தொடர்புக்கு
94421 66066
94888 45627
குறிப்பு
• கூட்டத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும் ஜெப எண்ணெய் பூசி விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்படும்.
• கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்.


நாகர்கோவிலில்
அற்புத ஆராதனை பெருவிழா
அக்டோபர்
19, 20
(திங்கள், செவ்வாய்)
அரசு விடுமுறை
காலை
10.00 மணிமுதல்
01.00 மணிவரை
Rev.Dr.A. ஜாஷ்வா
Dr. ஜேன் ஜாஷ்வா
இடம்: YMCA ஹால்
WCC கல்லூரி ரோடு
(ஹோட்டல் விஜயதா அருகில்), நாகர்கோவில்
தேவ பிரசன்னத்தை உணரும் ஆராதனை வேளை! | கருத்தான இறை செய்திகள்!
விடுதலையின் ஜெப நேரம்! | அன்றாட வாழ்க்கைக்கான சிறப்பு ஆலோசனைகள்
இக்கூட்டங்களில் பங்குபெறுகிற ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து ஜெபம் ஏறெடுக்கப்படும்.
விசேஷமாக 20ம் தேதி அன்பரின் ஊழிய பங்காளர்களின் குடும்பங்களை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கப்படும்.
தொடர்புக்கு : 94888 45627 / 99421 66066